# நட்புடன் பிரிவு ...!!!!

உதிரும் இதழ்கள்...
பூக்களுக்குப் பிரிவு...
சிதறும் இலைகள்...
கிளைகளுக்கு பிரிவு...
பட்ட மரம்...
மண்ணுக்குப் பிரிவு...
அதன் அழகு....
இயற்கைக்குப் பிரிவு...
தூறும் மழைத்துளி...
மேகத்துக்குப் பிரிவு...
தேயும் நிலவு...
வானுக்குப் பிரிவு...
இருண்ட வானுக்கு...
அதன் அழகுப் பிரிவு...
குழந்தைப் பருவம்...
16ல் பிரிவு...
இளமைப் பயணம்...
20ல் பிரிவு...
வாலிபப் பயணம்...
60ல் பிரிவு...
மாதம் தேய்வதால்...
வருடத்திற்கு பிரிவு...
மணிகள் உருள்வதால் ...
நாட்களுக்குப் பிரிவு...
வேதனைகள் தொடும் போது...
இன்பங்கள்ப் பிரிவு...
இங்கே...
விடிவெள்ளியாய்...
வானில் உதயமாகி...
காலை கதிரவனாய்...
கடமை தவறாமல்...
கரை தொடும் அலைபோல்...
கடமையாற்றி...
இன்று ...
கரையாய் எங்களை விட்டு...
அலையாய்ச் செல்லும்...
எங்கள் அன்பு நெஞ்சமே...
மாலை தென்றல் பரிசம் போல்
பசுமையான நினைவுகளுடன்...
பயணத்தின் முடிவில்....
விட்டுச் செல்லும் பயணி போல்...
எங்கள் பாசத்தை
மட்டுமே எடுத்துக் கொண்டு...
எங்கள் விழிகளில்...
கண்ணீரை மட்டுமே...
நிறுத்தி செல்லும்..
நீங்கள்
எல்லாம் வல்ல இறைவன் அருளால்...
இல்லத்திலும்...
உள்ளத்திலும்...
மகிழ்ச்சி பொங்க.....
நீவீர்...
வாழ்க பல்லாண்டு...
பல்லாயிரத்தாண்டு....
என வாழ்த்தும்.......
அன்பு நெஞ்சங்கள்.....

========================================================================

## *மழை...*

கண்டதும் கவர்ச்சி...
மனதில் கிளர்ச்சி...
இதயத்தில் மகிழ்ச்சி...
இனம் தெரியா...
தத்தளிப்பு...
உள்ளத்தில்...
கொப்பளிப்பு...
விழிகள் களக்க...
விடியல் குறையும் ...
இரவு நீளும்...
அமிர்தம் கசக்கும்...
அடங்காப் பசியும்...
அடையாளம் இல்லாமல்....
அனைத்தும் அவளே...
இல்லையேன் எமனே...
என்றும்...
கண்ணில்லாக் காதல்...
இல்லை.... இல்லை...
ஏனெனில்....
குருடனும் முடவனும்...
சாதிக்கும் இவ்வுலகில்...
விழியிருந்தும்...
விதியின் விளையாட்டில்...
மழையில் உடைந்த  ஆற்றங்கரையாய்...
விழியில் ஊற்றெடுக்க...
அடைமழையில் தத்தளிக்கும்...
ஊர்போல்....
உள்ளம் தத்தளிக்க....
மழை வேண்டி தவம் இருக்கும் மக்கள்...
சிலதருணத்தில்...
அம்மழையையும் வெறுப்பதுபோல்...
உலகம் போற்றும் காதல்...
ஏனோ உனக்கு மட்டும்...
வெறுப்பாய் அமைந்தது...
மழையும்.... காதலும்  ஒன்றே...
இரண்டும்...
அளவோடு...
இடம் புரிந்து...
வரும்பொழுது...
கண் இல்லாதக் காதலும்...
காலம் கடந்து பெய்யும் மழையும்...
இங்கே உலகம் அழியும்...
அங்கே உள்ளம் மடியும்...

=================================================================

## *உன் ஜீவன்...*
## *ரசிப்பதற்கு மட்டுமே....*
## *அணைப்பதற்கு  அல்ல!!!*

உயிரே...
நிலவாய் நான் வருவேன்...
மழலைபோல் நீ கண்டு களிக்க..
வானவில்லாய் உன் கண்  எதிரே....
என் வண்ண நினைவுகள்...
உன் மனதில் ஆர்ப்பரிக்க...
காலங்களாய் நான் வருவேன்..
உன் சோகங்களை..
இலைபோல் உதிர்த்து...
இன்பங்களை...
துளிர்போல் துளிர செய்ய...
உன் தோட்டத்தில்  பனி துளியாய்...
அதில்.... என்னுள்...
உன்னை...
கண்டுகளித்திட....
காலைக் கதிராய்...

உன் வீட்டு முற்றத்தில்...
விடியல் போல்....
உன் விழிகள்...
மகிழ்ச்சியில் மலர்ந்திட...
வந்த செல்வோர்....
பலர் இருந்தாலும்....
என்றும் பிரியா....
உன்னுடன் நீ...
செல்லும் பதையில் நிழலாய்...
உன் அருகில்...
என்றும்.... என்றென்றும்...
இரவாய் நான் வருவேன்...
உன்னை அமைதியில் தாலாட்ட....
உரமாய் உன் அருகில்....
மகிழ்ச்சிச் செழிப்பாய் நீ மலர...
அனைத்து உரவாய்....
நான் இருப்பேன்....

=====================================================================

## சுகமான சுமைகள்...

மலர் தாங்கும் கொடிபோல்...
பிறர்க்காக வாழும் வாழ்க்கையில்...
இதயம் தாங்கும் சுமைகள் யாவும்...
சுகமான சுமைகள்....
சுமக்கும் பொழுது பாரம்...
இறக்கும் பொழுது இனிக்கும்...
சுமக்கும் இதயத்திற்கு...
சுகம் தரும் பொழுது...
உணர்வில் கலந்து..
உயிர்பெறும் நினைவுகள்...
சுகமான சுமைகள்....
அன்னை வயிற்றில்....
அன்பாய் உதைக்கும்...
பிஞ்சுக் கால்கள்....
உலகில் பதிக்கும் பொழுது....
சுமக்கும் தாயிற்கு...
சுகமான சுமைகள்...
தவழ்ந்த காலங்கள்....
தத்தி நடக்கும் பாதங்கள்...
தாவும் இதயத்தை...
தாண்டிச் செல்லும் எண்ணங்கள்...
தயக்கம் மறந்து...
தன்னை மறந்து...
மலர் தாவும் வண்டாய்...
இனிய 16ல்
இன்பம் அனைத்தும் அடைய நினைத்து...
இமயம் 30ல்...
இல்லறம் ஏறி...
ஆழ்கடல் 40ல்
அனுபவம் தேடி...
வானுலகம் செல்லும் 60ல்
வாழ்க்கையைக் கண்டு...
வந்த பாதையைத் திரும்பில் பார்த்து...
முகபாவம் மாற...
அசை போடும்...
பல் இல்லா முதியவனாய்...
அவன் விடும் சுடு மூச்சில்...
சுமக்கும் கடந்த கால சுமைகள்...
சுகமான சுமைகள்...
எத்தனைச் சுமைகள் இருந்தாலும்...
இத்தனைச் சுமைகளும் தாண்டி...
என்னவள்...
அமிலமாய் சிந்தும் விழித்துளிகள்...
என் இதயத்தில் தாங்கும் பொழுது...
அவை தரும் சுமைகள்...
என்றும் எனக்கு...
சுகமான சுமைகள்....

ஆம்...
வேதனையும்...
சோதனையும்...
உச்சி வெயிலில் அலையாய்...
சுட்டெரிக்கும் பொழுது...
என்னவள் துயர் துடைக்க...
இறைவனும் மறந்தான்....
இன்னல் போக்க....
இங்கு ஒருவனைக் கண்டெடுக்க...
தூரிகை எடுத்தான்...
சித்திரம் படைக்க...
படைத்தச் சித்திரங்கள் அனைத்தும்...
என்னவள் பக்கம் வைத்து...
பொருத்தம் பார்த்தான்...
பொறுமை இல்லை அவனுக்கு...
இங்கே இதனை விட்டு....
அடுத்தப் படைப்புக்குச் சென்றான்...
தவிக்க விட்டு அவளை...
தன்னை மறக்கச் செய்தான்...
இறைவனும் மனிதனே...
மறப்பதில்...
ஆண்டுகள் உருண்டு...
புதுப் புது வருடங்கள் பூக்க...
பூத்த வருடங்கள்
இதழாய் உதிர...
இதனிடையே...
பழையன கழிதலும்
புதியன புகுதலும்...
இயற்கைப் படைப்பில் ஒன்று...
இவை இறைவனுக்கும் விதி விலக்கல்ல..
ஏதோ ஓர் நினைவில்...
என்றே சித்தரித்த...
சித்திரங்களில் பார்வை
அஜந்தா ஓவியம் போல்...
அழகு மாற சித்திரம் கண்ணில் காண...
இறைவனுக்கும்...
மலரும் நினைவுகள்...
எங்கோ ஓர் இடத்தில்....
பாதியில்நின்ற கடமை...
மின்னல் வெட்டாய் மனதில்...
இவனும் மனித தேடலில்...
விண்ணில் இருந்து கீழ்நோக்க...
அங்கே என்னவள்...
பாலை வனத்து ஒற்றை மரமாய்...
விழியில் நீர் தேடி...
விடியலை எதிர் நோக்கி...
இணைத்து வைத்தான்...
என்னை...
இங்கே....
இவன் படைப்பை...
சரிப்படுத்திக் கொண்டான்...
சுமைதாங்கியாய்...
அவள் அருகில்...
இடிதாங்கியாய்....
அவள் இதயத்தில்...
படிக்கல்லாய்...
அவள் இன்பப் பாதைக்கு...
எறிகல்லாய்...
இவள் துயர் துரத்தியடிக்க...
நெற்கதிர் தலை அசைப்பாய்...
இன்பம் தலை அசைத்து வர...
நெற்பதராய்...
இன்னல்கள் பறந்து செல்ல...
தேய் இலைபோல்...
அவள் துன்பங்களைப் பறித்து...
என் இதயக் கூட்டில்....
கொட்டிவிட...
அவள் துயர் துடைக்க...

அவள் நினைவில்...
நான் சுமக்கும் சுமைகள்...
சுகமான சுமைகள்...

==========================================================================

## *உயிரே.... உன்னை... உடல் வெறுக்குமா ?*

மடியும் பனித்துளி
ஆதவனை வெறுப்பதில்லை
அலை அரித்துச் செல்லும் கரையும்
அவ்வலையை வெறுப்பதில்லை
தீண்டும் முள்ளை
தாங்கும் மலர் வெறுப்பதில்லை
முத்துக் கொடுக்கும் சிப்பியோ
தன் இறப்பை நினைப்பதில்லை
எரியும் திரியும்
தான் கருகுவதை நினைப்பதில்லை
உருகும் மெழுகும்
தன் அழிவைய நினைப்பதில்லை
வாசம் தரும் மலரும்
தன் முடிவை எண்ணுவதில்லை
நேசம் கொண்ட நானும்
உன்னை
பாரம் என நினைத்ததில்லை
மீட்டும் விரலும்
வலி என நினைத்தால்
நாதன் பிறப்பதில்லை
பாடும் நாவும்
பதுங்கிக் கொண்டால்
பல்லவி பிறப்பதில்லை
பார்க்கும் விழியும்
பகைமைகொண்டால்
பாதை அங்கு தெரிவதில்லை
பாசம் கொண்ட உன்னை
பாதியிலே விட்டுவிட்டால்
நான் கொண்ட பாசம் அர்த்தமில்லை
சிவக்கும் முகம் காட்டும்
உன் சின்னச் சின்ன கோபங்களும்
சிமிட்டும் விழிகளும்
சிற்பமாய் மாறி
சிவந்து நின்றாலும்
சிரித்தே தாங்கிடுவேன்.
சின்னப் பூவே
உன் முகத்தில்
சிரிப்பை மட்டுமே
கண்டிடுவேன்.
கண்கள்..
இமையை வெறுப்பதில்லை
கண்மணி உன்னை
இமையாய்க் காத்திட
என்றும் மறந்ததில்லை
இடியாய் நீ வந்தாலும்
அதனை உள்வாங்கும் இடிதாங்கியாய்
நான் இருப்பேன்
உள்ளத்தில் எழா வார்த்தை
உன்
உதட்டில் உதிர்ந்தாலும்
அது
இதயத்தை ஊசியாய்த் தைத்தாலும்
இன்பமாய்த் தாங்கிடுவேன்
இனியவளே
நீ இன்புற்றிருக்க
உன்னை அரவணைக்கும்
அன்னையாய் நான் இருப்பேன்
பொய்க் கோபம் காட்டி
என்னைச் சுட்டாலும்
சங்கு போல் என்றும் இருந்திடுவேன்
உன் சந்தோஷம் குறையாமல் காத்திடுவேன்

இனியவளே!
உன்னை என்றும்
இன்பமாய் நினைத்திடுவேன்
நீ இன்னல்கள் மறைத்து
நீ என்னை வெட்டிச் சென்றாலும்
உன்னை நிழலாய்
என்றும் ஒட்டி வருவேன்
எனெனில்
என் நினைவில் நின்று
உயிரில் கலந்து
உன்னை என்னுள் கொண்ட
என் இதயம்
நீ தப்பிச் செல்லா
புதை மணல்!

==================================================================

## காதலி...
## மனைவி...
## தோழி...!!!!!!

முள்ளும் மலராய்த் தெரிய
ஆழ் கடலும்
அரை அடியாய்த் தெரிய
அஸ்தமனமும்
அதிகாலையாய்த் தெரிய
உதயம் காண
உயிர்கள் துடிக்க
குழந்தை போல்
உள்ளம் தொல்லை செய்ய
பசியும் மறக்கும்
பெண்மை அவள்
காதலியாய் வரும் பொழுது
சிரிப்பிற்கும் அளவில்லை
பேசும் மொழிக்கும்
பொருளில்லை
நேரமும் குறைவாய்
தெரியும்
இங்கே நேர்மையும் பறிபோகும்
காதலி அவள்
கைப்பிடியில்
இங்கே குருடனும்
ஓவியனாவான்
ஊமையும் கவிஞனாவான்
முதல் கவிக்கு
வித்திட்டவள்
காதலி அவளே
கருத்துகளும் பல
கருவாய் உருவெடுக்க
கற்பனைகளும்
தொடுவானமாய்
கையில் எட்டிப் பிடிக்க
பூக்கும், காய்க்கும்
என நம்பிக்கையில்
மண்ணில் மடியும்
விதையாய்
காதல் மொழி பேசி
கடற்கரை மணலும்
மாலைத் தென்றலும்
கதை சொல்ல
காதலும் அங்கே ஆசானானது!
இளமையும்
இனியவை ஆக
குறிக்கோளும்
குறில் நெடில் போல
குறைந்தும் நீண்டும்
வாழ்க்கை எனும்
பாதை தேடி

இருவிழி மேல் நோக்க
இருவிழி கீழ் நோக்க
காதலி இங்கே
மனைவியானாள்!
மைனர் செயின் கண்ட
சங்குக் கழுத்து
மஞ்சள் கயி கண்டது
மாடப்புறாவும்
இங்கே
ஜோதிப்புறாவானது
இளமையைக் களித்தவள்
இல்லத்தரசி ஆனால்
பார்வயில் தேடலும்
நினைவில் ஏக்கமும்
இதன் நடுவே
வாழ்க்கைத் துணைவனுக்கு
ஊக்கமுமானாள்
நிகழ் காலத்தை நினைத்தவள்
அங்கே காதலி
எதிர் காலத்தை கணக்கிடும் இவள்
இங்கே மனைவி
முன்னேற்றப் பாதையில்
ஏணியாய்
குடும்பத்தை ஏற்றிவிடும்
ஞானியாய்
இருக்கும் கூடும்
இனிமை நிறைந்த கூடாய் அமைக்கும்
தேனியாய்
துவளும் தலைவனைத்தாங்கி நிறுத்தும்
ஊன்று கோலாய்
அன்பாய் அறுபது வரை
ஆசானாய் அறிவு கூறி
மனைவி வேடம் களைந்து
சோரும் வயதில்
சோகம் தீர்த்து
தோளில் தலை சாய்த்துத்
தோழமை காட்டும்
போழியாகி விடுவாள்!
உறவுகள்... பாசங்கள்
பறந்து சென்றாலும்
பரிவு காட்டி
பழங்கதை சொல்லி
துயில் கொள்ளச் செய்வாள்
தூயவள் அவள் தோழியாக
முதிரும் இளமையும் மறைத்து
மீண்டும் இளமை காணும்
காதலியாய்க்
கவலை மறக்க செய்யும்ச்
தோழியாய்ப்
பயிற்று வித்தவள்...
பயின்றதை பறை சாற்றியவள்...
ஊர் அறிய ஊக்குவித்தாள்
வேடங்கள் மூன்று
ஏற்றிருக்கும் பெண்மையோ ஒன்று
ஏணியாய் ஏற்றிவிட்டு
எங்கோ மூலையில்
மூச்சடக்கி நிற்கும்
ஆக்கமும்
அடக்கமும்
ஆனவளே
பெண்மை...
அந்தப் பெண் உள்ளங்களுக்கு
இது சமர்ப்பனம் !!!!!

===============================================================

## பூவே பூந்தோட்டமாய்....

எங்கே
விதையாய் உருவெடுத்து...
இங்கே
இம்மண்ணில் விதையாய் வித்திட்டு..
உறவெனும் உரமிட்டு...
உயிரெனும் நீர்ப்பாய்ச்சி...
நினைவில் கலந்து...
உயிரில் உயிர்த்திட்ட உயிரே...
இளம் காலை தென்றலே...
உன் கயல் விழிப் பார்வையை....
தூரிகையென எடுத்து...
கண்ணக்குழி அழகில்...
என் எண்ணக் கல்லைக் கலந்து
உன் வண்ணத்தில் பிறந்த
என் எண்ணத்தைக் எழுத்தாக்கி...
பள்ளி மாணவனாய் நான்...
கவி கற்றுத்தரும் ஆசானாய் நீ...
உன்னில் கற்றப் படத்தை
நான்
இம் மண்ணில்
கவிதையாக்கினேன்...
என் கவிதையே நான் உன் கவிஞானேன்
கதிரவனைக் கானக் காத்திருக்கும்
காலை பனித்துளியாய்....
கண்டதும்
வெட்தி மறைந்தோடும்....
வெண்மதியால்...
உதயத்தில் சிவக்கும் கீழ்வானமாய்...
முகம் சிவந்தாள்
என்னைக் கண்டு...
படபடக்கும் பட்டாம் பூச்சியாய்...
அவள் இதயமும்
சினுங்கும் கொலுசு மணி அசைவில்
புள்ளி மானாய் துள்ளி வந்து...
அள்ளி அனைத்தாள்...
அங்கே...
மூச்சுக் காற்றில்...
சூறாவளியும்...
தூண்டில் மீனாய்...
துடிக்கும் குறு விழிகளும்...
சிதறும் முத்துகள்...
சிப்பிக்குள் சிறைப்பட்டது போல்
சிந்திய புன்னகையும்
சிற்பமாய் மாறிட
பெண்மையின் அடக்கமும்
ஆணின் ஆதிக்கமும்
ஒன்றாய் இணைய
இங்கே....
முள்ளில் ஓர் ரோஜா பூத்திட...
அன்பே உருவான ...நீ...
ஓர் பூந்தோட்டம்
தேனியாய் நான் !!!!!!

================================================================

## ஏமாற்றம்

பிறக்கும் போது அழுதேன்...
தாயின் கைகள் அரவணைத்தன...
நடக்கும் வயதில் அழுதேன்...
தந்தையின் கைகள் ஆறுதலாயின
கருத்தறியும் வயதில் அழுதேன்...
உடன் பிறப்புகள் உறுதுணையாயின...
ஆனால்
பருவ வயதில் அழுதேன்...
அனைவரும்

பாவம் என்றே சென்றனர்
ஏனேனில்..
அன்பே
நான் எதிர் நோக்கியது…
உன் கைகளை….
இங்கே
காலமாயின…
என் எதிர் பார்ப்புகள்…
==============================================================

## நாட்டுப் பற்று நடைபாதையில்

வீதியோரம் புறம் காட்டி
கூட்டம் கூட்டமாய் மக்கள்
வீதி வழி செல்வோரும்
திகைத்துப் பார்க்க
அங்கே
கூவி விற்கும்
கடையும் இல்லை
விதர்தை காட்டும்
கலைஞனுமில்லை
கூச்சலும்
கும்மாளமும்
கூடிக்களிக்க
கந்தல் உடையில்
நடைபாதைக் காரனும்
அவனருகில்
அவனைக் கண்டால்
விலகிப்போகும்
பட்டுச்சட்டைக்காரனும்
சமத்துவம் இங்கே
இதன் நடுவே
இளங் காலைப் பொழுதின்
மதிப்பறியா இளங்காளைகள்
வேலையில்லா மனிதர்கள்
ஏறு பிடித்தால் சோறு
எழுதும் எழுத்தாணி பிடித்தாலும் சோறு
உழைப்பே
உயர்வுக்கு வழி
இங்கே
வேடிக்கை பார்ப்பது எதற்கு வழி?
நாலாயிரம் கோடியில்
நாட்டு பற்று
இந்த நாற்பது பேருக்கா?
நாற்பது அடி ரோட்டில்
நான்கு சக்கர வாகனமும்
செல்ல வழியடைத்து
நடைபாதை செல்வோரும்
வழிதேடிச் செல்ல
இங்கே நடப்பது
நடைபாதா மறியலா?
உச்சி வெயிலும்
உள்ளந்தலை சுட
தன் வேலை செய்ய
ஆதவன் பார்த்து
இங்கே
வேலையில்லா
சோம்பி நிற்கும்
ஆதவன் கீழே
ஓடும் நேரம் மறந்து
சுழலும் காலம் மறந்து
செய்யும் கடமை மறந்து
வேடிக்கைக் காண
மிஞ்சும்
வேதனைதான் இங்கே…
நாட்டுப் பற்று
நம்மில் இங்கே
இம்மண்ணில் பிறக்கும்

அனைத்து
இளம் நெஞ்சிலும் உண்டு
கூவும் சேவல்
எழுப்பும் முதல்
கத்தும் தவளை
அஸ்தமனம் சொல்லும் வரை
நாட்டுப் பற்றுக் காட்ட
வழி நம்மிடமே உண்டு
இலட்சியம் மறந்து
அலட்சியத்துடன்
ஏர் மறக்கும்
உழவனாய்
உதயம் மறக்கும் ஆதவனாய்
உயிர் மறக்கும் உடலாய்
ஆதவன்
அஸ்தமனமும் அறியாமல்
எங்கோ
யாரோ !!!!!
இலட்சம் வாங்கும் லட்சியத்துடன் ஓடியாட
கவலையில்லாமல்
கால் கடுக்கக் காத்திருக்க
கடைக்காரனும்
தன் தொழில் லாபம் பார்த்து
சோர்வுகண்டு மூடும் பொழுது
சோம்பேறிகளும் சோதனை தந்திடும்
இந்த ஒருநாள் கிரிக்கெட்
நாட்டுப் பற்று காட்ட வழியல்ல

========================================================================

## முகவரி

உலகின்..
முழு முதற் கடவுளுக்கும்
முகவரியுண்டு...
வானில் உதயமாகும்
முழுநிலவுக்கும்
முகவரியுண்டு...
மண்ணில் உதயமாகும்
அனைத்துக்கும்
முகவரியுண்டு...
அவை அனைத்தையும் தாங்கும்...
மண்ணிற்கும்
முகவரியுண்டு...
எங்கோ பூக்கும்...
குறிஞ்சி மலர்க்கும்
முகவரியுண்டு...
ஆண்டவன் படைப்பில்...
அனைவருக்கும்
முகவரியுண்டு...
பத்துமாதம் சுமந்து பெற்றெடுக்கும்
குழந்தைக்கும்
முகவரியுண்டு...
குப்பைத் தொட்டியில் கண்டெடுக்கும்
அனாதைக்கும்
முகவரியுண்டு...
மூத்தத் தலைவர்கள்
அனைவருக்கும்
முகவரி இரண்டு..
மூன்று மணிநேர பொழுது போக்கும்
கலைஞனுக்கும்
முகவரி இரண்டு...
நாட்டை ஆளும் அறிவியல் மேதை
அப்துல் கலாமுக்கும்
முகவரி இரண்டு
இங்கே...
அவர் கண்டுபிடித்த
அறிவியல் ஆக்கத்திற்கும்

முகவரியுண்டு...
மூன்றெழுத்தில் தன் பெயர் கொண்டு...
மூன்றெழுத்தில் தன் உயிர்கொண்டு...
சொன்னதை செய்து...
சொல்லாமலே நம்மைவிட்டு சென்ற...
புரட்சி தலைவருக்கும்
முகவரி இரண்டு...
பூக்கும்... காய்க்கும்...
காய்ந்தது உதிரும் இலைக்கும்
மரம் தான் முகவரி
உதிக்கும்.... மறையும்....
ஆதவனுக்கும்...
வான்தான் முகவரி...
நுரை கொண்டு உருளும் அலைக்கும்
கடல்தான் முகவரி...
நிறம் இல்ல ஓடும் நீருக்கும்
ஆறு என்ற முகவரியுண்டு
ஈசன் அடி சேரும்
எல்லா உயிர்க்கும்...
முகவரியுண்டு...
உயிர்த்திடும் பொழுது...
தாய்தந்தை முகவரி...
உயர்ந்திடும் பொழுது ...
தன்னம்பிக்கை முகவரி...
ஊர் போற்றும் பொழுது...
மக்கள்தான் முகவரி...
உயிர் அடங்கும் பொழுது...
உன் செயல்தான் முகவரி...
பிறக்கும் பொழுது வரும் முகவரி....
உன்னை...
உலகிற்குக் காட்ட...
இறக்கும் பொழுது வரும் முகவரி...
உன்னை...
உலகம் தெரிந்து கொள்ள...
இங்கே... நானும்....
முகவரி.... தேடி....

==================================================================

## *நான் எரிந்தாலும் . . . .*

எல்லோரும் கொண்டாடும் தீபாவளி
கண்ணே உன் வீட்டில்
நீயும் கொண்டாடினாய்
உன் கடைக்கண் பார்வை காண
உன் தெரு கோடியில் நிற்க
சிரித்துகொண்டே நடந்தாய்
முதல்வெடி
We Two இரட்டை கிளி
பிரியாத இரண்டு பறவையைப் பிரித்தாய்
அப்பொழுதும் உன் சிரிப்பின் அர்த்தம் புரியவில்லை
உன் கடைக்கண் பார்வைகாட்டி
நீ வைத்தாய் இரண்டாம் வெடி
Standard நிலையான வெடி
என்று காட்டி நிலைகுலைய செய்தாய்
உதிரும் சிரிப்பில் உன் அர்த்தம் புரியவில்லை
எதையும் மூன்றுமுறை சொன்னால்தான்
முறை என்பது உனக்குத் தெரியும்
அன்பே தான்....
கண்ணுக்குத் தெரியாத
லஷ்மியே இங்கு வெடித்துக் கருகும்போது
உன் கண் எதிரே நிற்கும்
என் இதயம் உனக்கு வெறும் மத்தாப்போ
என்று...
எறித்துவிட்டாய்..
இப்போமுதுதான் தெரிந்தது எனக்கு
உன் வீதியில் எல்லோரும்
நரகாசூரனை நினைத்துக் கொண்டாடும் பொழுது

நீ மட்டும்
என் இதயத்தை வெடிவைத்துத் தகர்த்துவிட்டாய்
என்னவலே..
என்னுடன் முடியட்டும் இந்த வெடி விளையாட்டு
ஏனேனில்...
நான் உன் மீது கொண்ட அன்பு
நீ கையில் கொளுத்தும் மத்தாப்புப் போன்றது...
நான் எரிந்து மடிந்தாலும் சாம்பலானாலும்
உன்னைச் சுட மாட்டேன்.

================================================================

நிற்க...
மெதுவாகச் செல்லவும்
இங்கே
இதயத்தின்
ஊர்வலங்கள்... தனிமையில்...
துணையுண்டு என்றால்... நன்று
இறுதி வரை என்றதால்
================================================================

கண்ணே...
உன்னை மலர் என்றதால்
மறு நாளே உதிர்ந்து விட்டாய்..
நிலவென்று கூறியிருந்தால்
தினம் என் இதய வானில்
வலம் வந்திருப்பாயே....
================================================================

உன் உடலுக்கு ஏற்படும் வலிகள்
உனக்கு மட்டுமே தெரிகிறது...
உன்..
இதயம் சுமக்கும் வேதனை மட்டும்...
என் இதயத்திற்குத் தெரிகிறது..
உன்னைப் பிரதிபலிக்கும் நான்
கண்ணாடியானேன்....
================================================================

## *Lovers Day*

L oss of Income
O ver time work
V enture of Journey
E verything is waste
R ed flag Zone
S lashing Memory
D ay are counting
A ccident occured
Y ou R yet to DIE!!!
================================================================

உன் பிரிவு....
*TSunami* பாதிப்பாக இருந்தால்
உன் நினைவு..
அதில் தரும் *Relief* ஆக இருக்கட்டும்
================================================================

## *வார்த்தைகள் மட்டுமே நான் .........*

பூவே....
    நீயோ அங்கே..
உன் நினைவின் வசந்தத்தில்
    நானோ இங்கே...
ஏங்கும் உன் நினைவில்....
    அதை அறியுமோ உன் இதயம்...
முட்களாய் நிமிடங்கள் –அதில்
    அரவணைப்பாய் உன் நினைவுகள்...
நான் நாட்களாய் உதிர்கிறேன்  உன் பிரிவில்
    அவை மாதமாய்த் தெரிகிறது...
உன் நினைவில் இவை...
    வருடமாய் மாறுமுன்....
அன்பே நீயும் வந்துவிடு...
    வார்த்தைகள் மட்டுமே நான்
    அதன் அர்த்தங்கள்....
        நீ ....!!!!!!

=====================================================================

## *இழப்பு ......*

வானுக்கு
    நிலவில்லா இழப்பு
கடலுக்கு
    அலையில்லா இழப்பு
செடிக்கு
    மலர்இல்லா இழப்பு
கனிக்கு
    சுவையில்லா இழப்பு
சோலைக்கு
    காற்றில்லா  இழப்பு
என் நினைவுக்கு
    நீ இல்லா  இழப்பு
என்மனதுக்கு
    உன் நினைவில்லா இழப்பு

=====================================================================

## *உன் பாசவலையில்...!!!!!*

உன் பாசவலையில்
    துள்ளும் மீனாய் நான்
உன் இதயத் தொட்டிலில்
    நான் விழுந்தால்
நீந்தி மகிழ்வேன்
    நீ கண்டுகளிக்க....
உலகக் கடலில் விட்டால்....
    நீந்திச் செல்வேன் .....
உன் நினைவில்....
    மீண்டும்...
    உன் பாசவளையில் சிக்கும்வரை....

=====================================================================

Thoughts of Presentation
Builds of Attention
Minds of Reflecting
Hearts of Explosion
Love...

=====================================================================

அன்பே...
உதிர்ந்து போகும்..
நாட்கள்....
உருண்டு செல்லும்
மாதங்கள்....
ஓடிப்போகும் நிமிடங்கள்- அதில்
ஒளிந்துகொள்ளும் நேரங்கள்...
எழுதத்தோன்றும் எண்ணங்கள்
அதனை மறைக்கநினைக்கும்
உள்ளங்கள்....
சொல்லத்தோன்றும் நினைவுகள் – அதனைச்
சொல்ல மறக்கும் உதடுகள்-அனைத்தும்
உன் இதயத்தில் தீட்ட நினைக்கும்
உயிர் உள்ள சித்திரங்கள்
சுவாசமிக்க வார்த்தைகள்....
உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உணர்வுகள் – அனைத்தும்
வார்த்தைத் தேடும் அர்த்தங்கள்
வானவில்லின் வண்ணங்கள்
கானல் நீராய் பிம்பங்கள்
கனவாய்ப்போகும் எண்ணங்கள்...
உன் இதயம் ஏற்றும் வரை....
எண்ணங்கள் ஆறாய்
உன் நினைவுகளோ துடுப்பாய்
சிதறும் நிலவொளியில்
உன் மனம் தேடி
என் மனம் பயணிக்கின்றது . . .

==================================================================

நீ இரசித்தால்...
இது...
வெறும் கவிதை....
நீ உணர்ந்தால்....
உனக்கு....
நான் ஒரு கவிதை....

==================================================================

## *மீண்டும் மலர்வேன்*

பூக்கள்...
பூப்பது....
யாருக்காக?
மலரும்
பூக்களுக்குத் தெரியாது....
பூக்களை
இரசிப்பவனுக்குத் தெரியும்...
உதிர்வை எண்ணி
நான் கவலைப்படவில்லை
மீண்டும்
மலர்வேன் என்ற
நம்பிக்கை உண்டு...
எத்தனை முறை உதிர்ந்தாலும்
மீண்டும் மலர்வேன்
என்ற நம்பிக்கையிலே
உதிர்கிறேன்..
இதழ்கள்...

==================================================================

## *நீ விட்டுச் சென்ற உன் நினைவுடன்!!!!!!!!*

அன்பே
சுனாமியால் உனக்குச் சோதனைகள் வந்தாலும்
இடியாய் வேதனைகள் இருந்தாலும்
புயலாய் வாழ்க்கை அமைந்தாலும்
கடல்அலையாய் உன் மனம் தத்தளித்தாலும்...
ஆலம் விழுதாய்த் தாங்கி நிற்பேன்...

கரையாய் உன்னைக் காத்திருப்பேன்.
சோதனைகள்....
உன்னை....
கரைத்து விடாமல் இருக்க...
வேதனைகள் வேரோடு மறக்க
உன்மனம் இன்பத்தில் மலர....
இவ்...
மலரைத்தாங்கும்
கொடியாய் நான் இருப்பேன்...
நீ உதிர்ந்தாலும் . . . .
நீ விட்டுச்சென்ற உன் நினைவுடன்
நான்வாழ்வேன்...
=====================================================================

## பிரிவின் கொடுமை........

அன்று...
இனிப்பை அறியாதவரை
இனிப்புத் தெரியவில்லை
பிறப்பு அறியாதவரை
பிறப்புப் புரியவில்லை
இளமை அறியாதவரை
இனிமை புரியவில்லை
உன்னை அறியாதவரை...
உன் பிரிவு தெரியவில்லை....
இன்று....
பூத்தப் பிறகு
பூக்கள் அழகு தெரிகிறது...
உதிர்தபிறகு
சூரியன் சூடு தெரிகிறது...
பனித்துளி அழகு
விடியலில் தெரிகிறது...
உன்னை அறிந்தபின்...
உன் பிரிவின் கொடுமைபுரிகிறது...
=====================================================================

## மலராய் மலர்வேன்
## விதையாய்ப் புதைவேன் ...!!!!

உன்னை ..
மலர் என்பேன்..
நீ....
உதிர்ந்திட்டால்?
உன்னை ...
நிலவென்பேன்...
நீ....
தேய்ந்திட்டால்?
உன்னை...
அலையாய்
நான்சேரத் துடிக்கும் கரையென்பேன்....
நீ...
கரைந்துவிட்டால்?
விண்மீன் என்பேன்..
நீ...
தொலைவிலே நின்று விட்டால்?
தென்றல் என்பேன்....
உணரமட்டுமே முடியும் என்றல்?
பனித்துளி என்பேன்...
அதவன்பட்டு கரைந்துவிட்டால்?
முடிவு உள்ள இவையாவும்...
உன்மனதை
எனக்குப் பெற்றுத் தரப்போவதில்லை...
முடிவில்ல....
காதல் பெயர் சொல்லி....
உன் மனதைக் கேட்கிறேன்...
ஏனெனில்...
காலம் உள்ள வரை
காதல் இருக்கும்...

காற்று உள்ளவரை...
அதன் சுவாசமிருக்கும்....
உன் விழிப்பாதையில் நின்று
உன் மனதைக் கேட்கிறேன்...
உண்டென்றால்...
உன் மனதோடு அள்ளிச்செல்....
இல்லை என்றால்
என்னை மிதித்து செல்....
விதையாய்....
மடிந்துகொண்டிருப்பேன்...
உன் மனதில்...
என் நினைவுகள் வேர் ஊன்றும் வரை...
மலராய் மலர்வேன்
உன் மனம் ஏற்பதற்காக...
இல்லையென்றால்
விதையாய்ப் புதைவேன்
உன் இதயத்தில் வேரூன்ற...

================================================================

## *மடிந்துபோனேன்.....*

இல்லை...
என்ற ஆதவன்...
உன் இதழில் உதித்ததால்
நான்....
பனித்துளியாய்
மடிந்துபோனேன்...

================================================================

## *பொய்...*

மலரே....
நீ சொல்லும் பொய்...

அரவணைப்பில் சொல்லும் பொய்

ஆசையில் சொல்லும் பொய்

இஷ்டப்பட்டுச் சொல்லும் பொய்

ஈருயிர் கலக்கச் சொல்லும் பொய்

உணர்ச்சியில் சொல்லும் பொய்

ஊடலில் சொல்லும் பொய்
என நினைத்தேன்... ஆனால்

ஏமாற்றம் சொல்லும் பொய்

ஐயம் கொண்டு சொல்லும் பொய்

ஒதுக்க நினைத்துச் சொல்லும் பொய்

ஓசை இல்லாப் பொய்

ஔ என்ற எழுத்திற்கு வார்த்தைத் தேடுதல்போல்

ஏ(ஃ)க் கனமும் புரியாமல் இருக்கும் பொய்
உனக்கு மட்டுமே தெரியும்...
எந்த வரியில் என்னை ஏற்றுகிறாய் என்று...

**முதல்** வரியில் ஏற்றினால்
அமிர்தமாவேன்...
**இரண்டாம்** வரியில் ஏற்றினால்
ஆசையாவேன்...
**மூன்றாம்** நிலையில் ஏற்றினால்
இன்பமாவேன்...
**நான்காம்** நிலையில் ஏற்றினால்
ஈசல்போல் மடிந்துபோவேன்...

**ஐந்தாம்** நிலையில் வைத்தால்
உயிரோடுகலப்பேன்...
**ஆறாம்** படியில் வைத்தால்
ஊமையாவேன்...
**ஏழாம்** நிலையில் வைத்தால்..
என்னைப்போல் யாருமில்லை...
**எட்டாம்** இடத்தில் வைத்தால்
ஏமாளியாவேன்...
**ஒன்பதாம்** இடத்தில் இருந்தால்...
ஒவ்வொருகனமும் காத்திருப்பேன்...
**பத்தாம்** நிலையில் வைததால்...
ஓசையில்லமல் மடிந்துபோவேன்...
பூக்கும் இடத்தில்
நீ இருக்கின்றாய்
உன்னைத் தாங்குமிடத்தில்
நான் உள்ளேன்...
நீ பிரிந்தபிறகு....
நான் வாட....
==========================================================================

எழுத்துக்களைக் கோர்த்தேன்...
உன் மனது கரைந்தது
எண்களைக் கோர்த்தேன்
என் பணமும் கரைந்தது....
==========================================================================

தொழில் எனும்
பரந்த நிலத்தில்
Customer எனும்
நாற்று நட்டு
உழைப்பு
எனும் உரமிட்டு
Service எனும்
ஏர் உழுதால்
தலைநிமிர்ந்து
தலையசைக்கும்
நெற்கதிர் போல்
செழித்தோங்கும்தொழில் .....
==========================================================================

நிஜம் என நினைத்து....
நிழல்கண்டு ஏமாந்த....
இதயங்கள்...
இங்கே புதைந்துள்ளன...
மாற்றுப் பாதையில் செல்லவும்.....
தடங்கலுக்கு வருந்துகிறோம்..
புதைந்த இதயங்கள்..
==========================================================================

இங்கே ரயிலின்
மாறும் நிழலாய்
உன் வார்த்தைகள்...
நிலையில்லா உருவம்போல்...
உணர்வில்லா சொற்கள்....
வயலின் நடுவே உருவம்போல்
உன் வார்த்தைகள் கண்டு
ஏமாளியானேன்
ஒதுங்கிச் செல்லும் பறவைபோல்.....
==========================================================================

எழுத்துகளை
உணர்வினில் கோர்ந்து
வார்த்தைகளில்
உயிரினைக்கலந்து
எண்ணங்களை கவியாக்க

உன் இதயத்திற்கு
சமர்ப்பிக்கின்றேன்...
உன் .......
துடிப்பு உள்ள இதயம்
இதனைக் கேட்கட்டும்
இல்லையெனில்
என் இதயத் துடிப்பு அடங்கட்டும்...
=====================================================================

ஊமையின் கனவு
என் ஆசைகள்
குருடனின் கை ஓவியம்
என் கனவுகள்
முடவனின் கொம்புத்தேன்
என் நினைவுகள்
புதைந்துபோன மம்மிகள்
என் எதிர்பார்ப்புகள்
இன்று புதைந்தாலும்...
காலம் ஒரு நாள் சொல்லும்
அன்று
இசை அதிசயங்கள்
உணர்வுள்ள பொழுது
தெரியா என் உணர்வுகள்
உயிர் இல்லாதபோழுது
அதிசயமானால் என்ன...
அழிந்துபோனால் என்ன...
=====================================================================

அன்பே...
உன்னைப் பிரிந்து செல்வதால்
இது நிரந்தரம் அல்ல
ஒவ்வொரு நிலையத்தில் நிற்றாலும்
அது நிரந்தரம் இல்லை....
வளையம் போல்
உண்ணிடமே வந்து சேர்ந்து விடுவேன்
காத்திரு...
=====================================================================

## On 14th

Starting
A ll are Beauty
B lomming Blossem
C ool in Ice
D ays are short
E very minutes are long
F ancy show
G reat but nothing
H eavens found in ground
I diotic movemnts
J oyness welcome sorrow
K iss you for death
L aunching Emotions
M ore of happiness.
N ot for ever
O ccean looks small
P rompt in every thing
Q uick in Action
R ing in the life
S ome thing Special
T ill it taste
U pto last
V ictory found

W aste in next day
X' mas happiness
Y et to be fail
Z ero in Life
It's in end of the Year....
==================================================================

கவிஞர் அனைவரும்
காதலிப்பதில்லை
காதலிப்பவர் அனைவரும்
கவிஞன் ஆவதில்லை
பூக்கும் மலர்கள் யாவும்
பூஜைக்கு அல்ல....
பிறந்தயாவரும்
நிரந்தரமல்லர்
விதைப்பது அனைத்தும்
முளைப்பதில்லை...
காய்பது அனைத்தும்
சுவையானதில்லை...
இயற்கைக்கு இத்தனை மாற்றங்கள்
அதை ஏற்றுக் கொள்ளும் உன் இதயம்
மாறா என் இதயத்தை மட்டும்
வெறுக்கிறது ஏன்?
==================================================================

நாம் சேரவில்லை...
என்ற கவலை எனக்கில்லை
ஏனேனில்
பிறரை நாம் சேர்த்து வைப்பதால் ....
==================================================================

அவளை நான்
கவிதையாக்கினேன்
அவள் என்னை
காவியமாக்கி விட்டாள்
கவிதைகள்...
பிறக்கின்றன...
காவியங்கள்
உருவாக்கப்படுகின்றன...
==================================================================

புரட்டின பக்கங்கள்
சிதறிய எழுத்துகள்
படித்தவார்த்தைகள்
உன் உதட்டால் மட்டுமென்றால்...
உன் உதட்டிற்கு நன்றி
இதற்காவது உன் மனது சம்மதித்தது என்று...
உன் மனதால் என்றால்...
என் மனதுக்கு நன்றி....
உன் உணர்வுகள் சம்மதித்தது என்று...
உன் உணர்வால் என்றால்...
என் எழுத்துக்கு நன்றி...
உன் உணர்வை தொட்டதற்காக...
விதைத்தது நானாக இருந்தாலும்
பூப்பது உனக்காகவே....
==================================================================

விடியலில்...
ஆதவனாய் ஓடிவந்தேன்...
உன்னைகாண...
நீ யோ...
பனித்துளியாய் மறைந்து போனாய்
என்னை வெறுத்து....
==================================================================

என்னையே
விழிநோகப் பார்த்து
உள்ளம் நொந்து திட்டி
உன்னவனை எதிர்பார்த்து
நிற்கும் அன்பே...
இதோ...
உன்னவனை உன்னிடம்
கொண்டு சேர்த்துவிட்டேன்...
உன்னைப்போல்....
அங்கே ஒருவள் காத்திருக்கிறாள்...
நான் வருகிறேன்...
கண்ணே
என் உயிரைக் கொடுத்து...
உன் உயிரை...
உன்னிடம் சேர்த்துள்ளேன்...
நீ மீண்டும்
உன் உயிரை
என்னிடம் அனுப்பிவிடாதே....
அன்பே...
நீங்கள் வெறுத்தால்
நான் ஏற்கிறேன்....
என்மேல் தவறில்லை....
==================================================================

## *நீர் தவளைகள் !!!!!!*

வெறுப்பதில்லை...
பூக்கள் உதிரவதால்.. பூக்கள்
அதனை தாங்கும் கொடியை
வெறுப்பதில்லை...
நிலவே நீ தேய்பிறையானதால்
வானம் உன்னை வெறுப்பதில்லை....
கரைந்து செல்லும் கரை....
அலையை வெறுப்பதில்லை...
இன்று மடிந்து...
நாளை வரும் பனித்துளி
ஆதவனை வெறுப்பதில்லை...
உதிர்ந்து....தேய்ந்து...கரைந்து...மடிந்து
போகும் இவையாவும்
அதன் உறவை வெறுப்பதில்லை...
ஆனால்...
நீ மட்டும்..
என்னைவெறுப்பதேன்...
அலையென ஓடிவந்தேன்..
கரையென உன்னையடைய...
உன்..
வெறுப்பெனும் பாறை தடுத்ததால்
மோதி சிதறினேன்...
நீர்த் தவளைகள்போல்....
==================================================================

## *சிந்தனைவாதி*

கரையில்...
மீன் பிடிக்க நினைக்கும் நான்
ஒரு சிந்தனைவாதி...
ஏனெனில்....
என் கயல்விழி
கரையில் அல்லவா நீந்துகிறால்...
==================================================================

அன்பே...
உன் வேதனைகள்
உனக்கு .....
ரோஜாமுட்கள் போன்று...
ஆனால்...
எனக்குள்ள வேதனைகள்
சப்பாத்தி முட்கள் போன்று...
ஏனேனில்...
உனக்குள் தான் வேதனை....
ஆனால்..
வேதனைக்குள்ளே நான்...
அன்பே...
என்சோகங்கள்....
Bay of Bengal அலைபோல்
உன் சோகங்களே....
Arabian Sea அலைபோல்
என் சேகங்கள்....
என்னைக் கரைத்து....
கடல் எனும் சோகத்தில்...
மூழ்கிவிட்டேன்.....
கரைகரைந்து...
கரையில்லா கடல்போல்...
உன் சோகங்கள்...
கரையுள்ள கடல்போல்...
சிறுக கரைக்கும்
சேகங்கள்....
==================================================================

*வரும் வரை !!!!!!*

எத்தனை
கலர் நோட்டுகள் வந்தாலும்
நட்புப் பிரிவதில்லை...
ஓர்...
கலர்தாவணி
வரும் வரை..*!!!!!!!!*
==================================================================

*தோழி....*

வேதனையில் உதிரும் பொழுது
தென்றலாய் என்னைத் தாங்கிச் சென்றாய்
நீ . . . .என் நல்ல தோழி
ஆதவனாய்....
வேதனைகள் சுடும் பொழுது–உன்
பாசமெனும் கடல் நீரில் குளிரவைத்தாய்
நீ . . . .என் உயிர்த்தோழி
தேய்பிறையாக நம்பிக்கையூட்டும்
நீ . . . .என்பது பாசத் தோழி
வேதனைகள்
கரையை அரித்துச் செல்லும் போழுது
அதனை..
கருங்கற்கள் தடுத்து–என்னைச்
சோதனை எனும் கடல் மூழ்கடிக்காமல்
துன்பங்கள் முட்களாய் இருந்தாலும்–அதில்
இன்பங்கள் மலராய் மலரும் என...
துன்பங்களுக்கு மருந்திடும்
நீ . . . .என் ஆருயிர்த் தோழி
தோழி நீ....
தோள் கொடுக்கும் வரை...
சேதனைகள் தேளாய் கொட்டினாலும்
வேதனைகள் என்
மனத் தோனியை  அலைகழித்தாலும்...
துடுப்பாய் நீ உள்ளவரை...
துயரங்கள் அனைத்தும் கடந்திடுவேன்...
==================================================================

## *வாசம் தெரியும்*
## *பூக்கும் இடம்!!!!*

அனைவரும் பாராட்டினர்..
என் எழுத்துகள்
மனதை கரைத்தன என்று
அவர்களுக்குத் தெரியவில்லை..
அவ் எழுத்தகளுக்கு
வித்திட்டவள்
நீ ...என்று...
மலர்ந்து வீசும்
மலரைத் தெரிகிறது...
அதனை ...
தாங்கி நிற்கும்....
கொடியைத் தெரிவதில்லை...
அதனால்தான்...
அன்பே...
உன்னை என்னுடன் நிறுத்தி....
உன் வாசத்தை மட்டும்
இரசிக்க அனுப்புகிறேன்...
வாசம் தெரியும் மனத்துக்கு...
பூக்கும் இடம் தெரியாது....

==================================================================

## *கவிதை.....*

**க** எனும் எழுத்தால் களமிறங்கி

**வி** எனும் எழுத்தால் விதையிட்டு

**தை** எனும் திருநாளில் அறுவடை செய்ய....

**கவிதை....**
எனும் நெற்கதிர்....
தலைநிமிர்ந்து நிற்கும் பொழுது
கனவுகள் மலர்கின்றன....
கனவுகள் மறையும் பொழுது....
அங்கே
கவிதை...
அறங்கேறுகின்றது!!!!
==================================================================

**அ** எனும் எழுத்தழகு....

**ஆ** சையாய் உன்னை அழைக்கும் பொழுது..

**இ** எனும் எழுத்தழகு....

**ஈ**றுடல் ஒருயிர் எனும் பொழுது

**உ** என்பதழகு உன்

**ஊ**மை விழிகள் பேசும் பொழுது

**எ**ல்லாம் அழகு– என்னை நீ

**ஏ**ற்றும் பொழுது...

**ஐ** எனும் அழகு உன் ஐவிரலாய்...

**ஒ**ருங்கினைத்து...

**ஓ**வியம் படைக்கும் பொழுது

**ஔ** எனும் எழுத்தழகு...நீ ஔவையானாலும்

(எ)ஃக் கனமும் உன்னை மறவேன் என்பதால்...
உயிர் எழுத்தழகு.... அவை...
என்றும் உன்னில் கலந்திருப்பதால்....
==================================================================

Love
Birth of Missing...
Found of Missing...
Years of Missing
Sometimes
Heart of Missing
With love
===================================================================

## நட்பு...

விதைக்காமல் வளர்வது...
தேடாமல் தெரிவது....
தட்டாமல் திறப்பது
முடிவில்லா பிறப்பது...
நட்புடன்....
===================================================================

## இதயம்.....

ஜாதி மத பேதமில்ல...
ஒரு சமத்துவக் கல்லறை....
இங்கே...
மகிழ்ச்சி எனும் மலர் தூவி....
சோகங்கள் புதைக்கப்படும்...
நினைவுகள் எரிக்கப்படும்...
இதயத்துடன்...
===================================================================

## குடும்பம்

குடும்பம் ஒரு கோயில்....
மைல்கல்லாய் வழிகாட்டி...
படிக்கல்லாய் பிறர் ஏறிச் செல்ல....
கற்பகிறகத்துச் சிலையாய்...
நீ ஒளிரும் பொழுது...
உன் குடும்பம்..
ஓர் கோயில்...
===================================================================

உதிக்கும் சூரியன்...
உரிமை பார்ப்பதில்லை
நிழல்தரும் மரம்...
நிறம் பார்ப்பதில்லை..
வளைந்து செல்லும் நீரோடை....
வஞ்சனை செய்வதில்லை...
பூக்கும் மலர்....
வாசம் பிரித்துப் பார்ப்பதில்லை...
எழுத்துகள்....
தன் அழகைப் பார்ப்பதில்லை...
வார்த்தைகள்...
அதன்வளைவை இரசித்ததில்லை
எல்லாம்...
கவிதையாகும் வரை.....
===================================================================

கண்ணே....
உன்னை மலர் என்றதால்...
மறுநாளே உதிர்ந்து விட்டாய்...
நிலவென்று கூறியிருந்தால்....
தினம் என் இதய வானில்...
வலம் வந்திருப்பாயோ....
உன் உடலுக்கு ஏற்படும் வலிகள்....
உனக்கு மட்டுமே தெரிகிறது....
உன்..
இதயம் சுமக்கும் வேதனை மட்டும்...

என் இதயத்திற்குத் தெரிகிறது...
உன்னைப் பிரதிபலிக்கும் நான்...
கண்ணாடியானேன்...

========================================================================

உன் பிரிவு....
Tsunami பாதிப்பாக இருந்தாலும்
உன் நினைவு....
அதில் தரும் Reliefஆக இருக்கட்டும்

========================================================================

## *அர்த்தங்கள் நீ..........*

பூவே....
நீயோ அங்கே...
உன் நினைவின் வாசாத்தில்....
நானோ இங்கே....
ஏங்கும் உன் நினைவில்...
அதை அறியுமோ உன் இதயம்...
முட்களாய் நிமிடங்கள். அதில்....
அரவணைப்பாய் உன் நினைவுகள்....
நான் நாட்களாய் உதிர்கிறேன்-உன் பிரிவில்....
அவை மாதமாய்த் தெரிகிறது....
உன் நினைவில் அவை...
வருடமாய் மாறுமுன்....
அன்பே நீயும் வந்துவிடு...
வார்த்தைகள் மட்டுமே நான்...
அதன் அர்த்தங்கள்...
நீ....

========================================================================

## *இழப்பு!!!!!*

நிலவில்லா...
வானுக்கு இழப்பு.....
அலையில்லா கடலுக்கு இழப்பு.....
மலரில்லா...
செடிக்கு இழப்பு....
சுவையில்லா
கனிக்கு இழப்பு.....
காற்றில்லா
சோலைக்கு இழப்பு.....
நீ இல்லா....
என் நினைவுக்கு இழப்பு.....
உன் நினைவில்லா...
என் மனதுக்கு இழப்பு.....
துள்ளும் மீனாய் நான்....
உன் பாச வலையில்....
உன் இதயத் தொட்டிலில்....
நான் விழுந்தால்...
நீந்தி மகிழ்வேன்- நீ....
கண்டுகளிக்க....
உலகக் கடலில் விட்டால்...
நீந்தி செல்வேன் உன் நினைவில்
மீண்டும்.. உன் பாச வலையில்...சிக்கும் வரை...

========================================================================

## *உனக்கு நான்*
## *ஒரு !!!!*

அன்பே....
உதிர்ந்தது போகும்....
நாட்கள்....
உருண்டு செல்லும்...
மாதங்கள்
ஓடிப்போகும் நிமிடங்கள்-அதில்
ஒளிந்து கொள்ளும்...

நேரங்கள்....
எழுதத் தோன்றும் எண்ணங்கள்- அதனை
மறக்க நினைக்கும் உள்ளங்கள்...
சொல்லத் தோன்றும் நினைவுகள்- அதனை....
சொல்ல மறக்கும் உதடுகள்- அனைத்தும்....
உன் இதயத்தில் தீட்ட நினைக்கும்...
உயிர் உள்ள சித்திரங்கள்....
சுவாசமிக்க வார்த்தைகள்....
உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உணர்வுகள்- அனைத்தும்
வார்த்ததைத் தேடும் அர்த்தங்கள்...
வானவில்லின் வண்ணங்கள்...
கானல் நீராய்ப் பிம்பங்கள்....
கனவாய்ப் போகும் எண்ணங்கள்...
உன் இதயம் ஏற்றும் வரை...
எண்ணங்கள் ஆறாய் -உன்...
நினைவுகளோடு துடுப்பாய்...
சிதறும் நினைவொளியில்
உன் மனம் தேடி
என் மனம் பயணிக்கின்றது...
நீ இரசித்தால்....
இது...
வெறும் கவிதை...
நீ உணர்ந்தால்....
உனக்கு நான்....
ஒரு கவிதை...

================================================================

## இதழ்கள்...

பூக்கள்...
பூப்பது...
யாருக்காக?
மலரும்....
பூக்களுக்கு....தெரியாது....
பூக்களை....
இரசிப்பவனுக்குத் தெரியும்
உதிர்வை எண்ணி....
நான் கவலைப் படவில்லை....
மீண்டும்....
மலர்வேன் என்ற...
நம்பிக்கை உண்டு...
எத்தனை முறை...
உதிர்ந்தாலும்...
மீண்டும் மலர்வேன்...
என்ற நம்பிக்கையிலே
உதிர்கிறேன்..
இதழ்கள்...

================================================================

## உன் நினைவுடன்... நான் வாடுவேன்....

அன்பே...
சுனாமியாய் உனக்குச் சோதனைகள் வந்தாலும்
இடியாய்ச் சேதனைகள் இருந்தாலும்...
புயலாய் வாழ்க்கை அமைந்தாலும்...
கடல் அலையாய் உன் மனம் தத்தளித்தாலும்...
ஆலம் விழுதாய்த் தாங்கி நிற்பேன்...
கரையாய்ச் சோதனைகள்....
உன்னைக் கரைத்து விடாமல் இருக்க....
வேதனைகள் வேரோடு மறக்க...
உன் மனம் இன்பத்தில் மலர....
என் மலரைத் தாங்கும்....
கொடியாய் நான் இருப்பேன்...
நீ உதிர்ந்தால்...
நீ விட்டுச் சென்ற....
உன் நினைவுடன்...
நான் வாடுவேன்....

================================================================

## *பிரிவின் கொடுமை......*

அன்று...
இனிப்பை அறியாத வரை இனிப்புத் தெரியவில்லை
பிறப்பை அறியாதவரை பிறப்புப் புரியவில்லை
இளமை அறியாதவரை இளமைப் புரியவில்லை...
உன்னை...
அறியாத வரை....
உன் பிரிவுத் தெரியவில்லை...
இன்று...
பூத்த பிறகு பூக்கள் அழகு தெரிகிறது...
உதிர்ந்த பிறகு சூரியன் சூடு தெரிகிறது...
பனித்துளி அழகு விடியலில் தெரிகிறது....
உன்னை அறிந்தால்...
உன் பிரிவின் கொடுமை புரிகிறது...
==================================================================

## *இதயத்தில் வேர்வூன்ற...*

உன்னை ...
மலர் என்பேன்...
நீ...
உதிர்ந்து விட்டால்
உன்னை ...
நிலவென்பேன்....
நீ....
தேய்ந்திட்டால்...
உன்னை...
அலையாய் நான் சேரத் துடிக்கும் கரையென்பேன்...
நீ....
கரைந்துவிட்டால்....
விண்மீன் என்பேன்....
நீ....
தொலைவினிலே நின்று விட்டால்...
தென்றல் என்பேன்...
உணர மட்டுமே முடியும் என்றால்...
பனித்துளி என்பேன்....
ஆதவன் பட்டுக் கரைந்து விட்டால்..
முடிவு உள்ள...
இவை யாவும்
உன் மனதை எனக்கு பெற்றுத் தரப்போவதில்லை...
முடிவில்லா....
காதல் பெயர் சொல்லி...
உன் மனதைக் கேட்கிறேன்...
ஏனெனில்...
காலம் உள்ள வரை....
காதல் இருக்கும்....
காற்று உள்ள வரை....
அதன் சுவாசமிருக்கும்...
உன் விழிப்பாதையில் நின்று....
உன் மனதைக் கேட்கிறேன்....
உண்டென்றால்....
உன் மனதோடு அள்ளிச் செல்
இல்லையென்றால்
என்னை மிதித்துச்செல்....
விதையாய்....
மடிந்து கொண்டிருப்பேன்....
உன் மனதில்....
என் நினைவுகள் வேர் ஊன்றும் வரை....
மலராய் மலர்வேன்...
உன் மனம் ஏற்பதற்காக...
இல்லையென்றால்....
விதையாய்ப் புதைவேன்....
உன் இதயத்தில் வேர்வுன்ற...,
==================================================================

## *FARE WELL DAY*

A  ll dear friends…
B  est wishes in this happiest &
C  heerful day…
D  reams may become true…
E  ffectiveness had its own success…
F  aith will always be yours…
G  od may be with you…
H  eaven may comes true
I  n your life…
J  oyful college life…
K  ingmaker on these days…
L  ovable hearts…
M  issing of miss…
N  ear & dear comes to an end
O  n this day…
P  ure friendship & love…
Q  uit in this
R  emember able day…
S  orrows have blooming with
T  ears…
'U'  becomes
'V'
W  here check made
X  –mas happiness
Y  et to be end
Z  ig zag life
Starts as bike…
Tragedy & Comedy
Comes up as hump head…
Slow & steady
Have to be followed
To win in life…

With Love & Tears

==================================================================